"இனிமையான குழந்தைகளே! நீங்கள் வாயினால் எதுவும் பேசவேண்டியதில்லை. உண்மையான மனதுடன் ஒரு பாபாவை நிரந்தரமாக நினைவு செய்ய வேண்டும். உண்மையான மனம் உள்ளவர்களிடம் தான் பிரபு திருப்தியடைவார்.

கேள்வி: அனைத்திலும் நல்ல ஒழுக்கம் எது? நீங்கள் எந்த தெய்வீக நடத்தையை தாரணை (நடைமுறை) செய்ய வேண்டும்?

பதில்: சதா புன்சிரிப்புடன் இருப்பது ஒரு நல்ல பண்பு. தேவதைகள் சதா புன்சிரிப்புடன் இருக் கின்றனர். வாய்விட்டு சப்தமாக சிரிப்பதில்லை. சப்தமாக சிரிப்பதும் ஒரு விகாரம். குழந்தை களாகிய உங்களுக்கு நினைவின் மறைமுக குஷி இருக்க வேண்டும். பழக்க தோஷத்தின் சம்ஸ்காரமும் மிகவும் நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடிய தாகும். சேவையின் வெற்றிக்காகப் பற்றற்ற விருத்தி (உணர்வு) வேண்டும். பெயர் ரூபத்தின் துர்நாற்றம் ஒரு சிறிதும் இருக்கக் கூடாது. புத்தி மிகத் தூய்மையாக இருக்க வேண்டும். இந்த தாரணையுடன் சேவை செய்து மற்றவர்களையும் தன்னைப் போல் ஆக்குகிற சேவை செய்வீர்களாயின் முகம் புன்சிரிப்புடன் இருக்கும்.

பாடல்: அவர் நம்மைவிட்டுப் பிரிய மாட்டார்.....

ஓம் சாந்தி. குழந்தைகளுக்குத் தெரியும், அதுவும் வரிசைக்கிரமமான புருஷார்த்தத்தின் படி, அதாவது உண்மையான மனதுள்ளவர்களிடம் பகவான் திருப்தியடைவார். மனமும் ஆத்மாவில் உள்ளது இல்லையா? ஆகவே உண்மையான பகவானை நினைவு செய்வீர் களானால் சுகம் பெறுவீர்கள். நினைவு என்றால் உள்ளுக்குள் தந்தையை நினைவு செய்ய வேண்டும். பகவானை ஜெபியுங்கள். ஜெபத்தின் அர்த்தம் இதுவல்ல- அதாவது வாயினால் எதையாவது சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதல்ல. நினைவு செய்து கொண்டே இருந்தால் மிகுந்த சுகம் கிடைக்கும். மற்றவர்களையும் உங்களைப் போல ஆக்க வேண்டும். யாருக்காவது புரிய வைப்பதும் மிகவும் சுலபம். எப்படி உண்மையான பதிவிரதையான பெண் கணவரைத்தவிர வேறு யாரையும் நேசிப்பதில்லையோ, அதுபோலவே ஆத்மாவானது அந்தப் பரலௌகீக எல்லையற்ற தந்தையை உண்மையான மனதோடு நினைவு செய்ய வேண்டும். எப்படி நாயகன்-நாயகி இடையே அன்பு உள்ளது. அவர்கள் பெயர்-ரூபத்தில் சிக்கிச் சாகிறார்கள், விகாரத்தின் விஷயம் எதுவுமில்லை. நாயகி நாயகனையும், நாயகன் நாயகியையும் நினைக் கின்றனர். வேறு எங்குமே புத்தி செல்வதில்லை. வேலைகளையும் கூடச் செய்கிறார்கள், ஆனால் மனம் ஒருவரிடம் மட்டுமே உள்ளது. அது பவித்திர நினைவாக உள்ளது. சரீரமும் புத்தியும் அபவித்திரமாக இருப்பதில்லை. அவர்களுக்கும் கூட மகிமை உள்ளது. ஆனால் அவர்கள் மிகச் சிலரேயாவர். இந்த ஞானத்திலும் கூட உண்மையான நாயகிகள் மிகச் சிலர் தாம். மாயா அப்படிப்பட்டது--மூக்கைப் பிடித்துக் கொள்கின்றது. அங்கதனின் உதாரணம் கொடுக்கப்படுகின்றது. இராவணன் கூறினான் -- இவன் அசைகிறானா? இல்லையா? பார்க்கிறேன். யார் தீவிரமான மகாரதியாக இருக்கிறார்களோ அவர்களைத் தான் மாயா துன்புறுத்துகின்றது. எப்படி எலியானது கடிக்கும்போது முதலில் ஊதி ஊதி அது கடிப்பதே தெரியாதபடி செய்து விடுகின்றது. அதுபோல் மாயாவும் கூட மிகவும்

சக்தி வாய்ந்தது. யாராவது விதிமுறைக்குப் புறம்பாக நடந்து கொண்டால் உள்ளுக்குள் புத்திக்கு இரகசியமாக பூட்டுப் போட்டு விடுகின்றது. இதில் புரிந்து கொள்வதற்கான பெரிய புத்தி வேண்டும். பாபாவை நினைவு செய்கின்ற மிகுந்த பயிற்சி வேண்டும். பாபா மீது முழுமையான அன்பு வேண்டும்.

நீங்கள் பற்றற்றவராக இருந்து சேவை செய்ய வேண்டும். யாராவது எவ்வளவு தான் நல்ல குழந்தையாக இருந்தாலும் கூட அவருடைய பெயர் ரூபத்தில் சிக்கிக் கொள்ளக் கூடாது. இதனால் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். பாபா கூறுகின்றார், தன்னை அசரீரி ஆத்மா என உணர்ந்து என்னை நினைவு செய்யுங்கள். தன்னைத் தூய்மையாக வைத்திருங்கள். நீங்கள் சிவபாபாவினுடையவர்களாக ஆகிறீர்கள், அவர் உங்களைத் தூய்மையாக்குகின்றார். விகாரங்களை வெளியேற்றிவிட வேண்டும். உங்களுடைய பெயரே சிவசக்திகள் என்பதாகும். உங்களுக்கு சர்வசக்திவானிடமிருந்து சக்தி கிடைக்கின்றது. அதனால் அவரிடம் நன்கு யோகம் வைக்க வேண்டும். பாபா சொல்கிறார், நிரந்தரமாக நினைவு செய்வது என்பது சித்தி வீடல்ல. உணவு உண்ணும் போது எவ்வளவு முயற்சி செய்கின்றோம், பிறகும் கூட மறந்து விடுகின்றது. மிகவும் முயற்சி செய்கிறோம் - சாப்பிடுகின்ற நேரம் முழுமையும் பாபா நினைவில் இருந்து சாப்பிட வேண்டும், ஏனெனில் அவர் நமக்கு மிகவும் அன்பானவர். அதனால் நாம் ஏன் அவருடைய நினைவில் இருந்து சாப்பிடக் கூடாது? அப்போது அவரும் நம் துணையில் இருப்பார். பிறகும் கூட நினைவு அடிக்கடி மறந்து போகின்றது. பக்தி மார்க்கத்திலும் கூட புத்தி மற்ற மற்றப் பக்கங்களில் அலைந்து கொண்டே இருக்கின்றது. இதுவோ ஞானத்தின் விஷயம். இந்த விஷயங்களைக் குழந்தைகளும் கூட முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. நிரந்தர யோகத்தில் வந்து விட்டால் இப்போது கர்மாதீத் நிலை வந்து கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் நினைவு நிலைத்திருப்பதில்லை. பெரிய யுத்தம் நடைபெறு கின்றது. பாபா பார்க்கிறார், அநேகருடைய புத்தியோகம் அலைகின்றது. அசரீரி ஆவதில் முயற்சி செய்ய வேண்டியுள்ளது. மிகச் சிலரே உண்மையைச் சொல்கின்றனர். சொல்வதில் வெட்கம் வந்து விடுகின்றது. மாயா மிகவும் கொடியது. முகத்தை முற்றிலும் வேறு பக்கமாகத் திருப்பி வைப்பதில் தாமதம் செய்வதே இல்லை. நாம் குழந்தைகள் தானே என்ற மெத்தனம் கூடாது. யுக்திகளும் கூடச் சொல்லப்படுகின்றன. முதலிலோ கர்மாதீத் நிலையில் செல்ல வேண்டும். பிறகு நம்பர்வார் பதவி. பாபாவுக்குத் தெரியும் - குழந்தைகளை மாயா மிகவும் தொந்தரவு செய்கின்றது, நினைவில் நிலைத்திருக்க விடுவதில்லை. அநேகருடைய நிலையானது பார்க்கப்படுகின்றது. பெயர்-ரூபத்தில் சிக்கிக் கொள்கின்றனர். தன்னை அசரீரி என உணரக் கூடிய அப்பியாசம் செய்ய வேண்டும். ஏனெனில் நீண்ட காலமாகவே தன்னை அசரீரி என உணரவில்லை. சத்யுகத்தில் இந்த ஞானம் முழுமையாக உள்ளது-அதாவது நான் ஆத்மா, நான் இந்தப் பழைய சரீரத்தை விட்டு புதியதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சாட்சாத்காரமும் கிடைக்கின்றது. மறைமுகமான அல்லது நேரடியாகப் பார்க்கக் கூடிய காட்சியாகக் கிடைக்கின்றது. புரிந்து கொள்கின்றனர்--இப்போது சரீரத்தின் ஆயுள் முடிவடையும் நிலை வந்து விட்டது. யாராவது மரணப்படுக்கையில் உள்ள போது சொல்கிறார்கள் இல்லையா, இப்போது இறந்து விடுவேன் எனத் தோன்றுகிறது, இனி இருக்க மாட்டேன். அங்கே (சத்யுகத்தில்) பிறகு புரிந்து

கொள்கின்றனர், இப்போது சரீரம் பழையதாகி விட்டது. இதை இப்போது விட்டாக வேண்டும். தன்னுடைய நேரம் வரும் போது தானாகவே குஷியுடன் விட்டு விடுகின்றனர். ஆத்மாவின் ஞானம் முழுமையாக உள்ளது. தந்தை பற்றிய ஞானம் முற்றிலும் இருப்பதில்லை. டிராமாவில் இல்லை. அங்கே பாபாவை ஏன் நினைக்க வேண்டும்? தேவையே இல்லை. இங்கோ துக்கத்தில் மனிதர்கள் நினைவு செய்கின்றனர். நீங்கள் பிறகு தன்னை ஆத்மா என உணர்ந்து தந்தையிடம் யோகம் வைக்க வேண்டும். இந்த சரீரமோ பழையது. இதன் மீதோ முற்றிலும் வெறுப்பு வர வேண்டும். எவ்வளவு தான் அழகிற் சிறந்த சரீரமாக இருந்தாலும் விதிமுறையின் படி அனைவருமே கறுப்பாக உள்ளனர், ஏனெனில் ஆத்மா கறுப்பாக உள்ளது. இது புரிந்து கொள்ள வேண்டிய விஷயம். சரீரம் அனைவருக்கும் கறுப்பாக இருப்பதில்லை. இதுவோ காற்று, நீரைப் பொருத்ததாகும். எங்கே குளிர் அதிகமாக உள்ளதோ அங்கே வெள்ளை மனிதர்கள் உள்ளனர். ஆக, பாபா புரியவைக்கிறார்-புத்தி யோகத்தை ஒருவரிடம் ஈடுபடுத்த வேண்டும். எப்படி காதல் திருமணம் செய்து கொள்கின்றனர் இல்லையா? இதுவும் உங்களுக்கு ஆத்மாவின் காதல் திருமணமாகும். பிறகு இந்த தேகத் துடனும் அன்பு இருக்காது. தனது தேகத்தின் மீதே அன்பு இல்லை என்றால் பிறகு மற்றவர் களின் தேகத்தின் மீது என்ன அன்பு வைப்பது? உலகத்திலோ கறுப்பு அல்லது வெள்ளை என்பதில் தான் எல்லாம் நடைபெறுகின்றது. சிலர் பார்க்காமலே திருமண நிச்சயம் செய்து விடுகின்றனர். பிறகு முகத்தைப் பார்த்த பின் எனக்கு இது போன்ற கறுப்பு வேண்டாம் எனச் சொல்லி விடுகின்றனர். பிறகு சண்டையாகி விடுகின்றது - நான் பைசாவை என்ன செய்வது? எனக்கு அழகு தான் வேண்டும் என்கின்றனர்.

இப்போது நீங்கள் அறிவீர்கள், நாம் ஆத்மாக்கள். இந்தப் பழைய சரீரத்தின் மீது மோகம் வைக்கக் கூடாது. இதுவோ விகாரி சம்பந்தம் இல்லையா? உலகாயத விஷயங்களில் இருந்து உங்கள் விஷயம் வேறு பட்டது. இப்போது உங்களது கறுப்பு ஆத்மாவுக்கு வெள்ளைப் பயணியோடு திருமண நிச்சயம் ஆகியுள்ளது. இவ்வுலகில் அனைத்து ஆத்மாக்களுமே கறுப் பிலும் கறுப்பாக உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். வெள்ளையானவரோடு சம்பந்தம் ஏற்படுத்தி ஆத்மாவை வெள்ளையாக்க வேண்டும். ஒரு பயணி பல்லாயிரக் கணக்கானவர் களை அழகாக ஆக்குகிறார். கறுப்பு (தூய்மையற்ற) ஆத்மாவை வெள்ளையாக (தூய்மையாக) ஆக்க வேண்டும். இதில் மிக நல்ல யோகா வேண்டும். கறுப்பாக இருந்து விடுவதால், ஒன்று-தண்டனை அடைய வேண்டியிருக்கும். மேலும் பதவி தாழ்ந்ததாக ஆகிவிடும். இங்கே எவருடைய பெயர்-ரூபத்திலும் சிக்கிக் கொள்ளக் கூடாது. அது சேவைக்கு குந்தகம் ஆகிவிடும். அதனால் பாபா சொல்கிறார்--எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் மாயாவின் நீர்ச்சுழலில் வந்து விட்டிருக்கிறீர்கள். ஆனால் அதைப் புரிந்து கொள்ளவில்லை. விதி விடுவதில்லை. தங்களது பதவியைக் கீழானதாக ஆக்கிக் கொள்கின்றனர். பாபா சொல்கிறார் - யோக அக்னியின் மூலம் ஆத்மாவைப் பவித்திரமாக ஆக்க வேண்டும். இது பட்டியாகும் (சூளை). பாபாவிடம் யோகம் வைக்க வேண்டும். வேறு பக்கம் புத்தி சென்றால் விபச்சாரி நினைவாக ஆகிவிடும். சேவை செய்ய முடியாது. பதவியும் அடைய முடியாது. யோக அக்னி மூலம் மட்டுமே கறை நீங்கும். யோகம் இருந்தால் ஞானமும் தங்கும்.

பாபா யோகியாகவும் உள்ளார், ஞானியாகவும் உள்ளார். குழந்தைகளாகிய

நீங்களும் எவ்வளவு யோகி ஆகிக் கொண்டே செல்கிறீர்களோ, அவ்வளவு ஞானத்தின் தாரணையும் ஆகும். முதலில் ஆத்மாவைப் பவித்திரமாக ஆக்க வேண்டும். யோகம்-யோகம் எனச் சொல் கின்றனர், ஆனால் உங்களிலும் கூட அநேகர் யோகம் என்பதன் பொருளைப் புரிந்து கொள்ள வில்லை. யோகத்தாலன்றி தன்னையோ பாரதத்தையோ பவித்திர மாக்க முடியாது. சேவையும் செய்கின்றனர், சென்டர் திறக்கின்றனர். ஆனால் மாயா ஒரேயடியாக மூக்கைப் பிடித்து விடுகின்றது. அகங்காரம் வந்து விடுகின்றது - நாம் இத்தனை சென்டர்கள் திறந்திருக்கிறோம். தேக அபிமானம் வந்து விடுகின்றது. பாபாவோ புரிய வைக்கிறார்--தன்னை ஆத்மா என உணர்ந்து தந்தையிடம் யோகம் வையுங்கள். எந்த ஒரு கர்மமும் விகர்மமாகி விடக் கூடாது. பாபாவை மறந்து விட்டு யாருடைய பெயர் ரூபத்திலாவது சிக்கிக் கொள்வீர்களானால் பெரிய நஷ்டமாகிவிடும். இது பெரிய குறிக்கோள். உலகத்திற்கு எஜமான் ஆவது சாதாரண விஷயமா என்ன? பாபாவுக்கு எவ்வளவு மகிமைகள்! எவ்வளவு கோயில்கள் கட்டு கின்றனர்- அவர் பெயரில்! சோமநாதர் ஆலயத்தை யார் எப்போது கட்டினார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். .கோயில்களும் நம்பர்வார் உருவாகின்றன. சோம்நாத்துக்குப் பிறகு இலட்சுமி-நாராயணருடைய அல்லது ஜெகதம்பாவினுடைய கோயில். சோம்நாத் கோயிலை யார் கட்டியது என்பது மனிதர்களுக்குத் தெரியாது. அவரோ நிராகார். நிராகாரின் பூஜாரி நிராகார் சிவனையே பூஜிப்பார்கள். ஆனால் அவரைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. குழந்தை களாகிய உங்களிலும் கூட நம்பர்வார் இருக்கிறீர்கள். இரவும் பகலும் சேவையைப் பற்றிய அக்கறையே உள்ளது. எப்பொழுது தேக அபிமானம் விட்டுப் போகின்றதோ அப்போது தான் அந்த அக்கறை யானது பூர்த்தியாகும். தேகி அபிமானி ஆகவேண்டும். பாபாவிடம் முழுமையாக யோகத்தை வைக்க வேண்டும். அவர் மீது முழு மதிப்பு வைப்பதென்பது சித்தி வீடல்ல. மாயாவின் பூதம் யோகத்திலிருந்து விடுபட வைக்கின்றது. இதையோ பாபா மட்டுமே அறிவார். எத்தனையோ பேர் அவ்வளவு மென்மையாக, பொறுத்துக் கொள்ள முடியாதவர்களாக உள்ளனர்--ஏதாவது சொன்னால் உடனே துரோகி ஆகி விரோதமாகி விடுகின்றனர். அவர்கள் பிறகு தங்களுக்குத் தாங்களே பெரும் நஷ்டத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். ஆச்சரியப்படும்படியாக பாபா வுடையவர்களாக ஆகிறார்கள், பிறகு ஓடிப் போய்விடுகின்றனர். சேவைக்கு தடை செய்யத் தலைப்படுகின்றனர். பாகவதத்திலும் கூட பிரசித்தமாக உள்ளது-அமிர்தத்தை அருந்தி, அருந்திப் பிறகு விரோதியாக ஆகி தொந்தரவு செய்கின்றனர். பாபாவுக்கு எவ்வளவு சிந்தனை உள்ளது -- இன்னார் பக்குவமடையாதிருக்கிறார்கள், எந்தச் சமயமும் துரோகி ஆகி நஷ்டத்தை ஏற்படுத்த முடியும். துரோகி ஆகி நஷ்டத்தை ஏற்படுத்துகிறார்கள், பிறகு எத்தனை அபலைகளுக்குக் கொடுமை ஏற்படுகின்றது என்பதைப் பார்க்கத் தான் செய்கிறார். மற்ற சத்சங்கங்களில் கொடுமை நடைபெறுகின்றதா என்ன? இங்கே முதல் விஷயம், விஷத்தை (விகாரம்) விட்டு விடுவதாகும்.. ஆனால் விஷத்தை விடுவதில்லை.சொல்லவும் செய்கிறார்கள், இன்னார் சொர்க்கத்திற்குச் சென்று விட்டார்கள். ஆனால் சொர்க்கம் என்பதென்ன--இது பற்றி எதுவும் தெரியாது. அர்த்தமே இல்லாமல் யாராவது ஏதாவது சொன்னால் அதையே சொல்லி விடுகின்றனர். இப்போது எவ்வளவு புரிந்து கொள்ளுதல் வந்திருக்கிறது! யார் நல்ல-நல்ல பூவாக இருக்கிறார்கள் என்று பாபாவிற்குத் தெரியும். சிலரிடம் பெயர் ரூபங்களில் சிக்கிவிடு கின்ற துர்நாற்றம் இல்லை. ஞானத்தைத் தவிர வேறு எந்த விஷயமும் இல்லை. யோகமும் முழுமையாக

இருக்க வேண்டும். சிலர் முதலிலிருந்தே கறுப்பாகத் தான் இருக்கிறார்கள், பிறகு இன்னும் கூடக் கறுப்பாக ஆகிக் கொண்டே போகிறார்கள். இந்தச் சேனையில் யானைகளின் சேனையும் உள்ளது. ஆண் சிங்கங்கள், பெண் சிங்கங்களின் சேனையும் உள்ளது. ஆண் குதிரைகள், பெண் குதிரைகளின் சேனையும் உள்ளது. ஆண் ஆடுகள், பெண் ஆடுகளின் சேனையும் உள்ளது. எல்லாமே உள்ளன. நடத்தையால் உடனே தெரிய வரும். இவர்கள் செம்மறியாடுகள் போல் உள்ளனர். எதையும் புரிந்து கொள்வதில்லை, புத்தியில் பதிவதே இல்லை. எருமை புத்தி போல் உள்ளது. பாபா எவ்வளவு சுலபமாகப் புரியும்படி சொல்கிறார்--நீ ஆத்மா. உன்னால் எல்லையற்ற தந்தையை நினைவு செய்ய முடியாதா? ஏ ஆத்மா! நீ மற்ற அனைத்துத் தரப்பிலிருந்தும் புத்தியை விலக்கி என்னை நினைவு செய். உன்னால் நினைவு செய்ய முடியவில்லையா? மற்ற உற்றார் உறவினரையெல்லாம் நினைவு செய்கின்றாய். என்னை நினைப்பதில் கஷ்டம் உள்ளதா? சொல்கிறார்கள் -- பாபா, மாயா புத்தியோகத்தைத் துண்டித்து விடுகின்றது. அட, ஆஸ்தியை இழந்து விட்டு இருக்கப் போகிறீர்கள். புத்தி யோகத்தை முழுமையாக ஈடுபடுத்துவீர்களானால் உலகின் எஜமான் ஆவீர்கள். தந்தையை ஒரு போதும் மறந்துவிடக் கூடாது. தேக அபிமானி ஆவதால் தான் நீங்கள் மறக்கிறீர்கள். உங்களுக்கு அடிக்கடி சொல்லப் படுகின்றது-தன்னை ஆத்மா என உணருங்கள், தந்தையை நிரந்தரமாக நினைவு செய்யுங்கள். ஜெபிக்க வேண்டாம், சப்தமிட வேண்டாம். நீங்களோ சப்தத்திற்கு அப்பாற்பட்டுச் செல்ல வேண்டும். இராம்-இராம் என்று வாயினால் சொன்னால் தேக அபிமானத்தில் வந்து விட்டீர்கள். உள்ளுக்குள் சிந்தனை செய்ய வேண்டும். உறுப்புகளை ஆதாரமாக மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். நான் ஆத்மா என்று சாந்தியில் இருந்து பாபாவை நினைவு செய்ய வேண்டும். பாபா ஞானக்கடல், ஞானம் நிறைந்தவர். அவருக்குள் ஞானம் முழுவதும் அடங்கியுள்ளது. உங்களுக்கும் கற்றுத் தருகின்றார். பாபாவை நினைவு செய்வதன் மூலம் நீங்கள் பவித்திரமாகி விடுவீர்கள். புனித கிரீடம் கிடைக்கும். மேலும் சிருஷ்டி சக்கரத்தை அறிவதன் மூலம் இரத்தினங்கள் பதித்த கிரீடம் கிடைக்கும். இரட்டைக் கிரீடம் அணிந்தவர்களாக ஆகிவிடுவீர்கள். நினைவினால் தான் விகர்மங்கள் வினாசமாகும். இல்லையென்றால் தர்மராஜாவின் தண்டனையைப் பெற நேரிடும். பதவியும் கீழானதாக ஆகிவிடும். அதனால் பாபாவை நினைவு செய்ய வேண்டும். பிறகு குஷியும் இரகசியமாக இருக்க வேண்டும். சப்தமாகச் சிரிக்கக் கூடாது. இலட்சுமி-நாராயணர் புன்சிரித்த முகத்தினர் எனச் சொல்லப்படுகிறார்கள். புன்சிரிப்புடன் இருப்பது மற்றும் சிரிப்பது என்பது வெவ்வேறு விஷயமாகும். புன்சிரிப்புடன் இருப்பதால் குஷியில் மறைவாக இருக்கும். சப்தமாகச் சிரிப்பது கெட்டதாகும்;. புன்சிரிப்புடன் இருப்பது அனைத்திலும் நல்லதாகும். சப்தமாகச் சிரிப்பதும் கூட ஒரு விகாரமாகும். அதுவும் இருக்கக் கூடாது. குஷி முகத்தோற்றத்தில் வரவேண்டும். அது எப்போது வரும் என்றால் மற்றவர்களை உங்களைப் போல் ஆக்கும் போது. சேவை மற்றும் சேவை. சேவை கிடைத்ததும் அதைச் செய்வதற்காக ஓடோடிச் சென்றனர் என்று இருக்க வேண்டும். வேறு எந்த விஷயமும் இருக்கக் கூடாது. குழந்தைகளாகிய நீங்கள் சேவை செய்கிறீர்கள்- முட்களை மொட்டுகளாக மாற்றுகின்றீர்கள். பாபா குழந்தைகளுக்கு நல்ல-நல்ல கருத்துக்களை (பாயின்ட்ஸ்) சொல்கின்றார். இந்த நிச்சயம் வைக்க வேண்டும்- அதாவது பாபா தான் சொல்கின்றார், இவரும் (பிரம்மா) எனக்கு மகிமை செய்ய வேண்டாம் என்று சொல்கிறார், . மகிமைகள்

அனைத்தும் சிவபாபாவுக்கே! அவரை நினைவு செய்வதன் மூலமே முழு விகர்மாஜீத் ஆவீர்கள். மிகவும் சுலபமான விஷயமாகும். நினைவு செய்ய வேண்டும், சக்கரத்தைச் சுற்ற வேண்டும். முழுமையான சுவதர்சன சக்கரதாரியாக இறுதியில் நம்பர்வார் ஆகின்றார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. பாபாவைத் துணையாக வைத்துக் கொள்வதற்கான யுக்தியை உருவாக்க வேண்டும். உணவு உண்ணும் போது பாபா நினைவில் இருக்க வேண்டும். அசரீரி ஆவதற்கான அப்பியாசம் செய்ய வேண்டும். தனது பழைய தேகத்தின் மீதும் கூட அன்பு வைக்கக் கூடாது.

2. பாபாவுக்கு முழு மரியாதை வைக்க வேண்டும். அகங்காரத்தில் வரக்கூடாது. பெயர்-ரூபங்களின் நோயிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஞான-யோகத்தின் போதையில் மகிழ்ந்திருக்க வேண்டும்.

வரதானம் : அனைத்தையும் பாபாவிடம் ஒப்படைத்து விட்டு சங்கமயுகத்தின் பேரரசரின் மனநிலையை அனுபவம் செய்யக்கூடிய அழிவற்ற இராஜ்ய திலகத்தின் அதிகாரி ஆகுக.

இன்றைய காலத்தின் (கலியுகத்தின்) இராஜ்யம் செல்வத்தை தானம் செய்வதினால் கிடைக்கிறது, அல்லது வோட் (வாக்குரிமை) மூலம் கிடைக்கிறது. ஆனால் குழந்தைகளாகிய உங்களுக்கு சுயம் பாபா இராஜ்ய திலகத்தை கொடுத்திருக்கிறார். கவலையற்ற மகாராஜா - இது மிக நல்ல மனநிலையாக இருக்கிறது. பாபாவிடம் அனைத்தையும் ஒப்படைத்து விட்டீர்கள் என்றால் யார் கவலைப்பட வேண்டும்.? பாபா. ஆனால் கொஞ்சம் கொஞ்சம் வேறு எங்காவது தனது அதிகாரத்தை அல்லது மன்மத் (மனதின் வழியை) மறைத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பது அல்ல. ஒருவேளை ஸ்ரீமத் என்றால் பாபாவிடம் ஒப்படைத்து விட்டோம். அதுபோன்ற உண்மையான மனதோடு அனைத்தையும் பாபாவிடம் ஒப்படைத்து விடக்கூடியவர்கள் தான் டபுல் லைட், அழிவற்ற இராஜ்ய திலகத்தின் அதிகாரி ஆகிறார்கள்.

சுலோகன்: ஒவ்வொரு வார்த்தைகளையும் மகா வாக்கியமாக இருக்க வேண்டும், எந்தவொரு வார்த்தையும் வீணான போய் விடகூடாது அப்பொழுது மாஸ்டர் சத்குரு என்று சொல்ல முடியும்.